ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 1774/15 - 2012 සැප්තැම්බර් 05 වැනි බදාදා - 2012.09.05
**1774/ 15 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆம் திகதி புதன்கிழமை**
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## இறுதிக் கட்டளைகள்

காணி நிருணய கட்டளைச் சட்டம்

நிருணய கட்டளை இல - 1877 (குருநாகல்)

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், வேஉடவிலிஹத்பத்துவே மேற்கு திரஹன்தஹயே கோரளையில் ஹெரலியவல எனும் கிராமத்தில், இலக்கம் 657 கொண்ட கிராம முழு நில அளவை படத்தில் இலக்கம் 10 ஆகிய நிலத்துண்டுகளாக விபரிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக காணி நிருணயஞ் செய்யும் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிர்ணய அறிவித்தல் ஒன்று 1955 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி 10847 ஆம் இலக்க அரச வர்தமானியில் (இலக்கம் 3071 (குருநாகல்) கொண்ட நிர்ணய அறிவித்தலைப் பார்க்கவும்) மேற்கூறிய பிரிவின்படி வேறு முறைப்படி உரியவாறுவெளியிடப்பட்டதாலும்,

அவ்வாறு குறிப்பிடப்பட்ட அறிவித்தலின் படி பெற்றுக்கொண்ட சகல உரிமைக் கோரிக்கைகள் தொடர்பில் குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரமானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாலும்,

இங்கு கீழ் கையொப்பமிட்ட நான், குநிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 5(5) பிரிவின் படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், குறிப்பிட்ட காணிகள் அல்லது அவற்றின் பகுதிகள் இக்கட்டளையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிருணயஞ் செய்யப்பட்டதான கட்டளையை இத்தால் வழங்குகிறேன்.

**பீ.எம்.எச்.பிரியதர்சனி,**
நிருணய உதவி உத்தியோகத்தர்,
காணி உரித்து நிர்ணய ஆணையாளர்

காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்,
பத்தரமுல்லை,
2012 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆம் திகதி.

**அட்டவணை**

| துண்டு இல. | உப பிரிவு இல. | விஸ்தீரணம் ஏ. | றூ. | பே. | உரித்துப் பட இல. | நிர்ணய செய்யப் பட்ட வைகள் எவ்வுப பிரிவின் கீழ் அவ்வுப பிரிவின் இல. | உரிமைக்குரியவர்கள் | குறிப்புகள் (பங்குகள், அக்கறைகள், அடைமானங்கள், வழக்குகள், ஏனைய) | பதிவு செய்யப் பட்ட காணிப் பதிவுக் கந்தோர் | பரிமாண இல. | எதிர்ப் பக்க இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | _ | 4 | 0 | 38 | _ | 5(1) | அரசு | _ | _ | _ | _ |

09 - 557 / 1

# இறுதிக் கட்டளைகள்

காணி நிருணய கட்டளைச்சட்டம்

நிருணய கட்டளை இலக்கம் 1831 (குருநாகல்)

**திருத்தம்**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், கிழக்கு ஹதலிஸ்பஹ கோரளையில், கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில், (தற்போது எஹெடுவெவ பி.செ.பி.) இஹல எம்போகம (தற்போது ரத்ன திவுல்வெவ) கிராம சேவகர் பிரிவில், கல்கடவல கிராமத்திற்காக, (வரைபட இலக்கம் 3871) பிரசிரிக்கப்பட்டுள்ள இலக்கம் 5496 ( குருநாகல்) நிர்ணய அறிவத்தலின் படி 2010.06.28ம் திகதி, 1660/14ம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரிகை III ம் பகுதி காணியின் கீழ் ஆங்கில மொழியில் முதலாவது காணி நிர்ணய இறுதிக் கட்டளையில் கீழ் உள்ள திருத்தம் மும்மொழியிலும் திருத்தம் செய்யப்படுகின்றது.

இந்த வர்த்தமானிப்பத்திரிகையில் காணித் துண்டு இலக்கம் 22ல் குருப்பிடப்பட்டுள்ள நிர்ணயம் செய்யப்பட்ட 2வது உரிமையாளரின் பெயர் 'கணிதரத்ன பன்ஜனயலாகே லேனாகே மாடின்' என்பது நீக்கப்பட்டு 'கணிதரத்ன பன்ஜயனலாகே ஜேமாகே மாடின்' என்று உள்ளடக்கப்பட்டு திருத்தப்படல் வேண்டும்.

**பீ.எம்.எச்.பிரியதர்ஷனி,**
நிருணய உதவி உத்தியோகத்தர்,
காணி உரித்து நிர்ணய ஆணையாளர்

காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்,
பத்தரமுல்லை,
2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆம் திகதி.

09-557/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.